**தலைப்பு 302 - கூட்டுறவு ஊழியர்களின் ஆனைக்குழு**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிரயாம்**

---

கூட்டுறவு ஊழியர்களின் ஆனைக்குழுவின் 2021 திசெம்பர் 31 திகதி உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுறவு ஊழியர்களின் ஆனைக்குழுவின் நிதிக்கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஜுன் 28 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கபடுகின்றது.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்படும் விடயங்களிலான தாக்கங்கள் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுறவு ஊழியர்களின் ஆனைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்படும் விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாகக்ப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டை தீர்மானிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் ஆனைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றதென,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் செய்யப்பட் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாகிய காசுப்பாய்ச்சலை கணக்கிடும் போர்து ரூபா 448,620 ஆன முற்பண அறவிடல் கவனத்திற்கொள்ளாத காரணத்தால் செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாகிய காசுப்பாய்ச்சல் அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | ஆண்டினுள் சம்பளத்திளிலிருந்து அறவிடப்பட்ட முற்பணம் மாதாந்தம் திறைசேரி பிரதி செயலாளரிற்கு அனுப்பபடுவதால் முற்பண அறவிடல் மீதி செயற்பாட்டு நடவடிக்கையாக இனங்காட்ட நடவடிக்கை எடுக்கப்படக்கவில்லை. ஏசீஏ 5 படிவம் பிரகாரம் ஆண்டினுள் பணமாக முற்பண அறவிடல் ரூபா 793,820 ஆகும். | அரச கணக்குகள் வழிகாட்டி பிரகாரம் கணக்குகள் தயாரிக்க போறுப்பேற்க வேண்டும் |
| (ii) | முற்பண கொடுப்பனவு ரூபா 686,641 ஆனதுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 414,331 ஆக ரூபா 272,310 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஏசீஏ 5 படிவம் பிரகாரம் ஆண்டினுள் பணமாக முற்பண கொடுப்பனவு ரூபா 414,331 ஆனதனால் அப் பெறுமானம் செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (iii) | ஏனைய செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 176,310 ஆன செலவுகள் செயற்பாட்டு நடவடிக்கைக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சலை கணக்கிடும் போது கவனத்திற்கு எடுத்திருக்கவில்லை. | ஓய்வு பெற்ற அலுவலரொருவரின் மீதியான 176,310 வை தீர்ப்பதற்கு ஓய்வூதிய திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஏற்பாட்டின் மீது 2021 ஒக்தோபர் மாதம் கணக்கு பொழிப்பினூடாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (iv) | பௌதிக சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளை சுவீகரித்தல் பெறுமதி ரூபா 1,026,019 ஆனதுடன் காசுப்பாய்சல் கூற்றில் அது ரூபா 1,099,150 ஆக ரூபா 73,131 கூடுதலாக காட்டியிருந்தது. | ஆளணி பயிற்சி செலவின விடயத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 73,131 ஆன செலவினை மனித மூலதனத்திற்கான முதலீடொன்றாக கருதி காசுப்பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடு சுவீகரித்தலின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | கணக்குகளில் சரியான பெறுமதியை காட்ட போறுப்பேற்க வேண்டும் |

**(ஆ) கட்டுநிதி இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | ஏனைய தலைப்புகளிற்காக அறிக்கையிடும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 176,310 ஆன செலவை கட்டுநிதி இணக்கக் கூற்றில் காட்டியிருக்கவில்லை. | ரூபா 176,310 ஆன பெறுமதியை கட்டுநிதி இணக்கக்கூற்றில் செம்கையாக்கியுள்ள விதம் சமர்ப்பிக்கப்பட்டடிருந்தது. | கணக்குகள் வழிகாட்டியின் 06 ஆம் இலக்க பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | ஏனைய தலைப்புகளால் முற்பண "பீ" கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட செலவு வைத்தல் ரூபா 1,481,246 ஆன போதும், கட்டு நிதி இணக்கக் கூற்றில் ரூபா 863,736 என காட்டியிருந்ததால் ரூபா 617,510 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | ரூபா 1,481,246 ஆன பெறுமானத்தை செம்மையாக்கியுள்ள விதம் சமர்பிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iii) | அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2021/03 இன் 06 பந்தியினூடாக அறிமுகப்படுத்தியுள்ள படிவத்தில் இல்லாத திறைசேரிக்கு அனுப்பிய முற்பண "பீ" கணக்கு பெறுவனவு ரூபா 793,820 கட்டுநிதி இணக்கக்கூற்றில் செம்மையாக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி இணக்கக்கூற்றை மிகத் தெளிவாக சமர்பிப்பதற்காக திறைசேரிக்கு அனுப்பப்பட்ட முற்பண பீ கணக்கிற்கான பெறுவனவை வேறாக காட்ட நடவடிக்கை எடுப்பதாக. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீண்டுவரும் 03 செலவின விடயங்களிற்கான தேறிய ஏற்பாட்டிலிருந்து 42 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை வீச்சளவாக எஞ்சியிருந்தது. | **1101**<br>நிலவிய தொற்று காரணமாக பிரயாண மட்டுப்படுத்தல் விதித்த காலத்தினுள் அலுவலகம் பௌதீக ரீதியாக மூடப்பட்டமை மற்றும் அலுவலர்கள் மட்டுப்படுத்தலுடன் அழைக்கப்பட்டமை.<br><br>**1302**<br>இச்செலவின விடயத்தின் கீழான செலவுகள் எதிர்பார்த்த படி ஏற்படாததால் ஏற்பாடு எஞ்சுதல் ஏற்பட்டுள்ளது.<br><br>**1303**<br>இச்செலவின விடயத்தின் கீழான செலவுகள் எதிர்பார்த்த படி ஏற்படாததால் ஏற்பாடு எஞ்சுதல் ஏற்பட்டுள்ளது. | ஏற்பாட்டுத் தொகையை ஆண்டினுள் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

2.2 **பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளிற்குற்படல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 ஒக்தோபர் 26 திகதிய 2021/02 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டியின் 4.5 பந்தி பிரகாரம் குறைநிரப்பு கணக்கு பொழிப்பினூடாக திறைசேரிக்கு அறிக்கையிடாத எந்தவொறு கடப்பாடு அல்லது பொறுப்பையும் 2022 ஆண்டினுள் தீர்க்கக் கூடாது என குறிப்பிட்டுள்ள போதும் 2021 ஆண்டிற்குரிய கட்டிட வாடகை ரூபா 225,000 இனை 2022 ஆண்டினுள் செலுத்தியிருந்ததுடன் அது 2021 ஆண்டின் பொறுப்பாக நிதிக்கூற்றில் காட்டியிருக்கவில்லை. | 2021 திசெம்பர் மாத கட்டிட வாடகை செலவு ரூபா 225,000 தவறுதலாக பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | வழிகாட்டி ஆலோசனை பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

3. **மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஆணைக்குழுவின் அங்கீகார ஆளணி எண்ணிக்கை 23 ஆனதுடன் உள்ளவாறான எண்ணிக்கை 17 ஆனதில் 06 வெற்றிடங்கள் காணப்பட்டன. | குறித்த வெற்றிடங்களை நிரப்பிக்கொள்ள இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அடிக்கடி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | குறித்த வெற்றிடங்களை நிரப்பிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |